
யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி

சாவகச்சேரி

# நிறுவுநர் நினைவுப் பேருரை

## 05.02.2011



FEB 2011

**Dr. சாம்பசிவமூர்த்தி சிவயோகன்**

*M.B.B.S. MD(psych)*

உள மருத்துவ நிபுணர்.

போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# கற்றலை ஆளும் கர்த்தாக்கள்:

## இடைநிலைக் கல்விசார் வினையாற்றல்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியதொரு பார்வை

07 FEB 2011

**Dr. சாம்பசிவமூர்த்தி சிவயோகன்**

*M.B.B.S. MD(psych)*

உள மருத்துவ நிபுணர்.

போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

## கற்றலை ஆளும் கர்த்தாக்கள்:
## இடைநிலைக் கல்விசார் வினையாற்றல்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றியதொரு பார்வை

வைத்திய கலாநிதி சா.சிவயோகன்

### *அறிமுகம்*

கல்வி என்றால் என்ன? என்பது பற்றிய பல்வேறு பார்வைகள், வரைவிலக்கணங்கள் இருந்தபோதிலும், கல்வியின் விளைபயன் ஒரு பூரணமான மனிதனை உருவாக்குவதே என்னும் கருதுகோளை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே பாடசாலைக் கல்வியும் அது ஆரம்பக் கல்வியாக இருந்தாலென்ன, இடைநிலைக் கல்வியாக இருந்தாலென்ன, ஒரு பிள்ளை பூரணமான மனிதனாக உருவாவதற்குரிய ஏதுநிலையை வழங்க வேண்டும். இதனைக் கருத்திற் கொண்டே மாணவர்களின் பாடவிதான வடிவமைப்பில் அந்தந்த வயது மற்றும் விருத்தியினைக் கருத்திற்கொண்டு பல்வேறு பாடப்பரப்புகள் உள்ளடக்கப்படுவதுடன், பாடசாலையில் இடம்பெறும் கற்றல் செயற்பாடுகளிலும் வகுப்பறைக்குப் புறம்பான பல செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக் கின்றன.

ஆயினும் எமது சூழமைவில் இந்தப் பரந்த, விரிவான பார்வைகள் உருமாற்றம் பெற்றுவிட்டன. கல்வி என்பதை வெறுமனே கல்விசார் வினையாற்றல்களின் தொகுப்பாகப் பார்க்கின்ற வழக்கம் ஒன்று ஏற்பட்டு, அது தற்பொழுது அங்கிங்கெணாதபடி எல்லாவிடங்களிலும் வியாபித்து இருக்கின்றது. பரீட்சைப் பெறுபேறுகள், பாடங்களுக்குக் கிடைத்த புள்ளிகள், பெறுபேறுகளை ஒப்பிட்டு அதன் மூலம் கிடைக்கின்ற தரப்படுத்தல் நிலை, சித்தியடைந்தவர்கள் எண்ணிக்கை, சித்தியடையாதவர்கள் தொகை போன்ற இலக்கங்கள் மட்டுமே கல்வி கற்கும் மாணவர்களையும், கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களையும், கல்வி வாய்ப்பை வழங்கும் பாடசாலை போன்ற நிறுவனங்களையும் மதிப்பீடு செய்கின்ற அளவுகோல்களாக மாறிவிட்டன. இவ்வாறான ஒரு கருத்து நிலை வியாபித்திருக்கும் சூழலில் நான் கற்றலை ஆளும் கர்த்தாக்கள் எனும் தலைப்பைப் பேசுபொருளாக்கத் துணிந்தேன்.

இந்த உரையில் நான் கல்விசார் வினையாற்றல்களில் குறிப்பாகப் பரீட்சைப் பெறுபேறு களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு காரணிகளை அறிமுகப்படுத்த விரும்புகின்றேன். உங்களுக்கும், எனக்கும் தெரிந்த பல விடயங்களை நான் இவ்வுரையில் ஓர் ஒழுங்கு முறைமை யில் தொகுத்துள்ளேன்.

#### கல்விசார் வினையாற்றல்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

பொதுவாக ஒரு மாணவரின் கல்விசார் பெறுபேறு தொடர்பாக அந்த மாணவரையோ அல்லது அவருக்குக் கற்பித்த ஆசிரியரையோ பாராட்டும் அல்லது இகழ்ந்து தூஷிக்கும் ஒரு வழக்கத்தை நாம் காலங்காலமாக அவதானித்திருந்தாலும், அண்மைக் காலத்தில் அவ்வாறான தொரு பண்பு மிக அதிகளவில் விரவியிருப்பதனைக் காண்கின்றோம். ஆயினும் மாணவர்களினால் எய்தப்படும் பெறுபேறுகள் அவர்களுடைய,

- தனியாள் சார்ந்த காரணிகள்
- பாடசாலை சார்ந்த காரணிகள்
- பெற்றோர் சார்ந்த காரணிகள்
- சூழல் சார்ந்த காரணிகள்

எனும் பரந்து விரிந்த, பன்முகத்தன்மை கொண்ட காரணிகளின் தாக்க விசைகளுக்கு உட்பட்டு, அவற்றின் கூட்டு விளைவாகவே ஏற்படுகின்றன என்பதனை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். இந்தப் புரிதல் உருவாவதற்காக நாங்கள் மேற்குறிப்பிடப்பட்ட காரணிகளைப் பற்றிச் சற்று விரிவாக நோக்குவோம்.

#### தனியாள் சார்ந்த காரணிகள்

மாணவர்கள் தத்தமது வயதுக்கும், விருத்தி நிலைகளுக்குமேற்ப சில பொதுவான இயல்புகளைக் கொண்டிருந்தாலும், ஒவ்வொரு மாணவரும் தனித்துவமானவர்களே. அவர்கள் தமக்கேயுரித்தான விசேடமான

குணவியல்புகளையும், நடத்தைக் கோலங்களையும் கொண்டிருப்பர். இவ்வாறான பல பிரத்தியேக காரணிகள் மாணவர்களது கல்விசார் வினையாற்றல்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

*இயல்பூக்கம்*

மாணவர்களுக்குக் கல்விமேல் இருக்கின்ற, கல்வியின் அடைவு மட்டமாகக் கணிக்கப்படு கின்ற பெறுபேறுகள் தொடர்பான தெளிவும், அதை அடைவது தொடர்பான இயல்பான ஊக்கமும் இருப்பது அவசியமானது. தனது இலக்குத் தொடர்பான ஆர்வமும், அதனை அடைவதற்கான உந்துசக்தியும் உடைய மாணவர்கள் அதனை இலகுவில் கைவரப் பெறுவார்கள். இந்த இயல் பூக்கம் தானாக ஏற்படுவதாக இருந்தாலும், அது மாணவர் ஒருவரது எதிர்பார்ப்புகள், வாழ்க்கை இலக்குகள், அவரது வாழ்வைச் சூழவுள்ள காரணிகள், முன்னுதாரணமான வகிபாக மாதிரிகள் போன்றவற்றால் மாற்றமடையக்கூடியதாகவும் அமைந்திருக்கிறது.

*இலக்கு நிலையை நிர்ணயம் செய்தல்*

மாணவர்கள் தாங்கள் எதனை அடைய விரும்புகிறார்கள் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். அந்த அடைவு இலக்கை நடைமுறைச் சாத்தியமான ஒன்றாகத் தெரிவு செய்துகொண்டு அதனை நோக்கி நகர வேண்டும். இலக்கின்றிய கல்வி என்பது திசையறி கருவி இல்லாததொரு நிலையில் மிதக்கும் சிறுகப்பலின் பயணம் போன்றது. மாணவர்கள் என்னென்ன செயல்களில் ஈடுபட்டாலும், எங்கெங்கு படித்தாலும் தமது இலக்கு நிலையை தம்மனக்கண்ணில் தொடர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். அவ்வாறானதொரு நிலைமையில் அந்த இலக்கை அடைவது எளிதாக இருக்கும். பொழுது போக்கிற்காகவும், பிரபல்யமடையும் நோக்கத்திற்காகவும், மந்தை இயல்பூக் கத்தினாலும், கற்கப் புறப்படும் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைக் காட்டமாட்டார்கள்.

*மனப்பாங்கு*

ஒருவருடைய மனப்பாங்கு அவர் செய்கின்ற செயல்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. மாணவர்களில் காணப்படும் பல்வேறு மனப்பாங்குகள் அவர்கள் பாடப்பரப்புகளில் கவனம் செலுத்துவதனையும், நல்ல பெறுபேறுகள் எடுப்பதனையும் பாதிக்கின்றன. எமது மாணவர்களிடையே மிகப் பரவலாகக் காணப்படும் போட்டி மனப்பாங்கானது ஆரோக்கியமான நிலையிலும், மிதமான அளவுகளிலும் காணப்படும் பொழுது அது அவர்களின் பெறுபேறுகளை அதிகரிக்கச் செய்வதுவும்; அந்தப் போட்டி மனப்பாங்கு மிகையாகும் பொழுதும், அதனுடன் கோபம், பொறாமை, மற்றவரை எவ்வாறாயினும் வீழ்த்துதல் போன்ற ஆரோக்கியமற்ற பண்புக்கூறுகள் இணைகின்ற பொழுதும், அது மாணவர்களின் பெறுபேறுகளில் எதிரிடையான செல்வாக்கைச் செலுத்துவதும் ஆய்வுகள் மூலம் நிரூபணமாகியுள்ளது. தற்காலத்தில் பாடப்பரப்புகளிலும், பாடத்திற்குப் புறம்பான நடவடிக்கை களிலும் ஆரோக்கியமற்ற போட்டித்தன்மையே அதிகரித்துச் செல்வதுபோல தெரிகின்றது. இது மேலும் ஆய்வுக்குரியதொன்றாகும்.

*புத்திக்கூர்மை*

மாணவர்களுடைய பெறுபேறுகளை, அவர்களிடம் காணப்படும் புத்திக்கூர்மையின் அளவு நேர் விகிதமாகப் பாதிக்கின்றது. சராசரி மாணவர் ஒருவரின் புத்திக்கூர்மை 100 எனும் அலகாக இருந்தாலும், 95 வீதமான மாணவர்கள் 70 தொடக்கம் 130 அலகுகள் வரைக்குமான மிகப்பெரிய புத்திக்கூர்மை வீச்செல்லைக்குள் வருவார்கள். இந்தப் பெரிய வீச்செல்லை, அவர்களது வினைத் திறனிலும் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்தவல்லது. மாணவர்களின் புத்திக்கூர்மையை அவர்களது பரம்பரையலகுகளும், அவர்கள் வாழும் சூழலும் இணைந்து தீர்மானிக்கின்றன. எனவே கல்விசார் அடைவுகளைப் பற்றி ஆராயும் பொழுது, மாணவர்களுடைய புத்திக்கூர்மை வீச்செல்லையையும் கவனத்திலெடுக்க வேண்டும்.

சில வேளைகளில் நல்ல புத்திக்கூர்மையுடைய மாணவர்களிலும் குறிப்பிட்ட சில பாடங் களுக்கான, உதாரணமாகக் கணிதம் அல்லது வரைதல் போன்றவற்றிற்கான, தேர்ந்தெடுக்கப்பட்ட புலமைக் குறைபாடுகள் காணப்படலாம். அவ்வாறான புலமைக் குறைபாடுகள் குறித்த அந்த ஓரிரு பாடங்களையும், சில வேளைகளில் மொத்தப் பெறுபேறுகளையும் பாதிப்பிற்குள்ளாக்கலாம். இது ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாகும்.

*மொழி சார்ந்த சிக்கல்கள்*

இடைநிலைக் கல்வி பயில்கின்ற கணிசமான மாணவர்களில் மொழி சார்ந்த சிக்கல்கள் இருப்பது அவதானிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் தமது தாய்மொழியிலும், இரண்டாவது மொழி யிலும் மிகவும் பின்னடைவான ஒரு நிலையில் இருக்கின்றார்கள். மொழியை விளங்கிக்கொள் வதிலும், அதனைப் பிரயோகித்து வாய் மூலம் அல்லது எழுத்து மூலம் தொடர்பாடலை ஏற்படுத்து வதிலும் அவர்கள் சிரமப்படுகின்றார்கள். மேலும் மொழியைக் கற்பித்து, அதில் புலமையை வளர்க்கும் பணி முன்னைய காலங்களைப்போல் இப்போது நடைபெறுவதில்லை என்கின்ற ஒரு குற்றச்சாட்டும் இருக்கின்றது. எனவே மொழி வளம் சரியாகக் கைவரப் பெறாத மாணவர்கள் தமது கல்விசார் பெறுபேறுகளிலும் பின்னடைவைக் காட்டுகின்றார்கள்.

இவற்றைவிட ஒரு சிறிய வீதத்தினர் மொழியை வாசிப்பது தொடர்பான குறைபாட்டையும் கொண்டிருக்கலாம். இவர்கள் எழுத்துக்களை வாசிப்பதிலும், அவற்றிற்கு அர்த்தம் கொடுத்து விளங்கிக் கொள்வதிலும் சிக்கல்களை எதிர்கொள்வார்கள். பல சந்தர்ப்பங்களில் இந்தக் குறைபாடானது கண்டறியப்படாத ஒன்றாகப் போய்விடுவது வருந்தத் தக்கது.

***விசேட தேவையுடைய பிள்ளைகள்***

நாம் விரும்பியோ, விரும்பாமலோ கணிசமானளவு பிள்ளைகள் பல்வேறு விதமான விசேட தேவைகளைக் கொண்டிருப்பார்கள். பார்வைக் குறைபாடு, கேட்டற் குறைபாடு, அசைவியக்கக் குறைபாடு, பேச்சுத் தொடர்பான சிக்கல்கள், சமூகமயமாதல் தொடர்பான பின்னடைவுகள் போன்ற வெவ்வேறு விதமான விசேட தேவைகளுடைய பிள்ளைகளும் சாதாரண வகுப்புகளில் உள்வாங்கப்படுகிறார்கள். இவ்வாறு உள்வாங்கப்படுகின்ற மாணவர்களுடைய விசேட தேவைகளுக்கேற்ற வசதி வாய்ப்புகளுடன் கற்பித்தல் நடைபெறாத பொழுது, அது கற்றல் செயன்முறையில் குறைபாடுகளை ஏற்படுத்திவிடுகின்றன. இந்தக் கற்றல் குறைபாடுகள் பின்பு கல்விசார் வினையாற்றல்களில் பாதிப்பை ஏற்படுத்திவிடுகின்றன. ஆசிரிய வளம் அல்லது வளமான ஆசிரியர்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவுள்ள எமது பாடசாலைகளில் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்குரிய, அவர்களுக்கேற்றவிதமான கற்பித்தல்கள் அதிகளவில் நடைபெறுவதில்லை. நாங்கள் இன்னமும் அத்துறையில் ஆரம்பப் படிநிலைகளிலேயே இருக்கின்றோம்.

***உடல் நோய்கள்***

சிறுவர்கள் ஆரோக்கியம் நிறைந்தவர்கள்; சுறுசுறுப்பானவர்கள்; துருதுருவென்று நிறைவான சக்தியோடு செயற்படுபவர்கள். ஆனாலும் சிறுவர்களுக்கும் நோய்கள் வந்துவிடுகின்றன. தொய்வு, வலிப்பு, மூட்டுவாதம் போன்ற நாட்பட்ட நோய்கள், குறிப்பாக அவை சரியான முறையில் கட்டுப்படுத்தப்படாதவிடத்து, சிறுவர்களின் கற்றலில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. நோய்கள் மட்டுமல்லாது அந்த நோய்களுக்குப் பாவிக்கின்ற சில மருந்துகளும், அந்நோய் தொடர்பாக அவர்கள் அனுபவிக்கின்ற இடர்பாடுகளும், சில நோய்கள் காரணமாக அவர்களுக்கு ஏற்படுகின்ற களங்க மனப்பாங்கும் மாணவர்களின் கற்றலிலும், கல்விசார் அடைவுகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. உடற் குறைபாடுகள், அங்கவீனங்கள் போன்றவையும் இவ்வாறானவையே.

நோய்களைப் பற்றிய தெளிவான அறிவின்மையும், நோய்ப் பராமரிப்புக்கான வாய்ப்பு வசதிகள் குறைவாக இருப்பதுவும், நோய் தொடர்பான திறந்த தொடர்பாடலுக்குரிய சூழல் இல்லாமற் போவதும் நோய்களை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்யும் திறனைக் குறைத்துவிடுகின்றன. இறுதியில் இவ்வாறான நோய் நிலைகள் மாணவர்களது கல்விசார் பெறுபேறுகளில் எதிர்மறையான பாதிப்புகளை ஏற்படுத்துவதனைப் புரிந்துகொள்ளலாம்.

***உளச்சிக்கல்கள்***

இடைநிலைக் கல்வி பயிலும் மாணவர்கள் மிகவும் சிக்கற் தன்மையுடைய, ‘புயலும் நெருக்குவாரமும்’ நிறைந்த கட்டிளமைப் பருவத்தினூடாகப் பயணிக்கின்றனர். இந்தப் பராயம் பல்வேறு விதமான உணர்ச்சிக் கோளாறுகளும், அடையாளக் குழப்பங்களும், நடத்தைப் பிரச்சினைகளும் ஏற்படுகின்ற பராயம். மிகவும் பாரதூரமான சில மனநோய்கள் தொடங்குகின்ற வயது வீச்சும் இவர்களுடையதே. இவற்றைவிட, பாலியல் விருத்தியும், மது மற்றும் ஏனைய போதைவஸ்துகளின் பரிச்சயமும் பொதுவாக இப்பராயத்தினரிலேயே

ஏற்படுகின்றன. ஆகவே சந்தேகத்திற்கிடமின்றி இப்பருவத்தினரிடையே பல்வேறு விதமான உளச்சிக்கல்கள் தோன்றுகின்றன. இவ்வாறு தோன்றுகின்ற உளச்சிக்கல்கள் சரியான முறையில் அடையாளங் காணப்படுவதுடன் அவை தகுந்த வழிகளில், மிகுந்த நிதானத்தோடும், பொறுமையோடும், தேவைப்படும் பொழுது துறைசார் நிபுணர்களின் உதவியோடும் கையாளப்பட வேண்டும்.

எந்தவிதமான உளச்சிக்கல்களும் அறிகைப் புலத்தின்மீது தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே மாணவர்களில் ஏற்படுகின்ற உளச்சிக்கல்கள் புலன் வாங்கல், புலக்காட்சி கொள்ளல், அவதானித்தல், கருத்தூன்றல், நினைவில் நிறுத்துதல், காரண காரியத் தொடர்புகளை விளங்கிக் கொள்ளுதல், விளங்கியதை வெளிப்படுத்துதல், ஆக்கத்திறனோடிருத்தல், கற்பனை மிகுதல் போன்ற பல்வேறு அறிகைசார் செயற்பாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தவல்லனவாக அமைந்து விடுகின்றன.

'சாதாரணம்' என்று சொல்லப்படுகின்ற வாழ்வுச் சூழலிலேயே பல்வேறு விதமான உளச்சிக்கல்கள் அடையாளங் காணப்பட்டிருக்கின்றன. எமது பிரதேசத்தில் நிலவிய பல்லாண்டு காலப் போர் வாழ்வும், தற்போது நிலவும் சடுதியாக ஏற்பட்ட போருக்குப் பின்னான வாழ்வும் இடைநிலை மாணவர்களிடையே அதிகமான உளச்சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இவை ஏதோவொரு வழியில் மாணவர்களது கல்விசார் வினையாற்றல்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை நாம் மறந்துவிடலாகாது.

*பாடசாலை வரவு*

மாணவர்களின் கல்விசார் வினையாற்றல்களைப் பாடசாலை வரவுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தபோது ஒழுங்கான பாடசாலை வரவுடைய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை எடுப்பது அவதானிக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்று வரவு குறைந்த மாணவர்களும், இடைவிலகிய அல்லது இடைநிறுத்தப்பட்ட மாணவர்களும் தமது வினையாற்றல்களில் குறைபாடுகளைக் கொண்டிருப்பதுவும் தெரிய வந்தது. இதிலிருந்து ஒழுங்கான முறையில் கிடைக்கின்ற கல்விச் சூழலானது மாணவர்களின் கல்விசார் வினையாற்றல்களைக் கூட்டுகின்றன என்ற முடிவுக்கு வரலாம்.

தற்காலத்தில் நாட்கணக்காக, வாரக்கணக்காக என்று இல்லாமல் தவணைக் கணக்காகப் பாடசாலை வரவைப் புறக்கணிக்கும் மாணவர்களும், அதனைக் கண்டும் காணாததும் போன்று அதற்கு அனுமதியளிக்கும் நிர்வாகிகளும் இதனை மனங்கொள்ளுதல் நன்மையானது.

*கற்றல் முறைமை*

மாணவர்கள் தமது கல்வியை ஒழுங்காக, ஒரு திட்டமிடப்பட்ட முறையியல் அடிப்படையில் கொண்டு செல்வது அவசியமானது. கடைசி நேரத்தில் படிக்கலாம் என்றெண்ணுகின்ற மாணவர்களும், ஒழுங்கற்ற முறையில் நுனிப்புல் மேயும் மாணவர்களும் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெறமுடியாமல் போகின்றமை அவதானிக்கப்பட்டிருக்கிறது.

வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்து, அந்தந்த வாரங்களுக்கும், மாதங்களுக்கும், தவணைகளுக்கும் உரிய பாடவிதானங்களை ஒழுங்காகப் படித்து முடித்து, தெரியாதவற்றைத் தெரிந்தவர்களிடம் வினவி, தாம் கற்றுக்கொண்டவற்றை மீட்டுப் பார்த்து அவற்றைத் தமக்குரிய முறையில் விளங்கி வைத்துப் பயிலும் மாணவர்கள், பரீட்சை நுட்பங்களையும் சரியாகக் கையாளும்போது நல்ல பெறுபேறுகளை எய்துகிறார்கள்.

*முரண் தகவல்கள்*

பரீட்சைப் பெறுபேறுகளை மட்டும் முதன்மைப்படுத்துகின்ற ஒரு சமூகம், அதற்காகப் பல்வேறு விதமான குறுக்கு வழிகளையும் நாடத் தயங்குவதில்லை. பாடசாலைக் கல்விக்கு மாற்றீடாகப் பரீட்சை மையக் கல்வியை வழங்கும் நிறுவனங்களின் வளர்ச்சியும், மாணவருக்குப் பதிலாக அந்நிறுவனங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தயார்ப்படுதலும் ஓர் இயல்பு மாறிய, துன்பியல் யதார்த்தமாக ஆகிவிட்டது. இதன் காரணமாக மாணவர்கள் காரண காரியத்தொடர்புகளை விளங்குதல், பிரச்சினை தீர்க்கும் திறனாற்றலை வளர்த்தல், எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும் ஆற்றல் போன்றவற்றை இந்த மாற்று நிறுவனங்களிடம் அடகு வைத்துவிட்டு, தமது மூளையின் கலங்களை அதிகம் பாவிக்காது விடுகிறார்கள்.

மேலும் அதிக அவாவுடைய மாணவர்கள் ஒரு பாடத்திற்கு அல்லது ஒரு பாடத்தின் ஒரு விடயத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட பல ஆசிரியர்களிடம் படிப்பதனையும் 'நாகரிகமாகக்' கொண்டுள்ளனர்.

எனது அவதானிப்பின்படி, எவ்வாறு ஒவ்வொரு மாணவரும் தனித்துவமான குணாம்சங்கள் உடையவர்களாக இருக்கிறார்களோ, அவ்வாறே ஒவ்வொரு ஆசிரியரும், அவர்கள் கற்பிக்கும் முறையும் தனித்துவமானவையாகவே இருக்கின்றன. ஒரு விடயம் சம்பந்தமாக ஒன்றிற்கு மேற்பட்ட ஆசிரியர்களின் உதவியை நாடும் மாணவர்கள், வெவ்வேறு விதமாக வெளிப்படுத்தப்படும் ஒரே விடயம் சம்பந்தமாகப் புரிந்து கொள்ளக்கூடியவர்களாகவும், தேவைப்படும் இடங்களில் கிடைக்கின்ற தகவல்களைப் பிரித்தறியக்கூடிய திறனுடையவர்களாகவும் இருப்பது அவசியமானது. பல சந்தர்ப்பங்களில் வெவ்வேறு வளவாளர்கள் மூலம் கிடைக்கின்ற செய்திகள், விளக்கங்கள் மாணவர் மனதில் முரண்பாடான ஒரு மனநிலையைத் தோற்றுவித்துவிடுவதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்த முரண்கள் கல்விசார் அடைவுகளைப் பாதிக்கின்றன.

***பரீட்சை நுட்பங்கள்***

எவ்வாறு படித்தாலும், பரீட்சையை எதிர்கொள்வது என்பதனை ஒரு கலையாகவும் நோக்க வேண்டும். அந்தக் கலை பயிலக்கூடிய ஒரு கலையாக இருந்தாலும், அதனை ஆற்றுகை செய்யும் இலாவகம் எல்லோருக்கும் ஒரேமாதிரியாக வருவதில்லை. பல சமயங்களில் கேள்விகளுக்கான விடைகளைத் தயார் செய்யும் அளவிற்கு, கேள்விகளுக்குப் பின்னால் இருக்கின்ற மறைமுகமான பரீட்சைச் சூக்குமங்களைப் புரிந்துகொள்வதில் மாணவர்கள் அதிகம் அக்கறை செலுத்துவதில்லை. இதனால் கேள்விகளை வழமைக்கு மாறான முறைகளில், விதங்களில், வடிவங்களில் சிறுசிறு மாற்றங்களோடு கேட்கப்படும் வேளைகளில் மாணவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்வதும், சராசரிப் பெறுபேறுகளில் வீழ்ச்சியைக் காண்பிப்பதுவும் அவதானிக்கப்பட்டிருக்கிறது.

கேள்விகளையும், கேள்விக்கான விடைகளையும் தயார்ப்படுத்திக் கொடுத்து, மாணவர்களை மனனஞ்செய்யும் உயிரினமாக வளர்க்கும் கல்வி முறைமையில் இவ்வாறான பிரச்சினைகள் வரத்தான் செய்யும். எப்போது கல்வியில் தன்னியல்பான, புத்தாக்கம் நிறைந்த சாதனைகளுக்கு மதிப்பளிக்கப்படுகிறதோ; அப்போதுதான் மாணவர்களது மூளையானது தனது முழுமையான செயற்றிறனை அடையக்கூடிய வாய்ப்பு ஏற்படும்.

***இணைப்பாடச் செயற்பாடுகள்***

விளையாட்டு, குழுவேலை, கலை வெளிப்பாடுகள் போன்ற இணைப்பாடச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்கள் தம் கவனம் சிதறி, தமது படிப்பில் குறைபாடடைகின்றார்கள் என்ற ஒரு தவறான கருத்து, பல பெற்றோரிடமும், ஆசிரியரிடமும் ஆழமாகக் குடிகொண்டுள்ளமையைக் காணலாம். உண்மையில் இணைப்பாடச் செயற்பாடுகளில் விருப்போடு ஈடுபடும் பல மாணவர்கள் பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளை எடுப்பதனை நாங்கள் எல்லோரும் கண்டும், கேட்டும், அறிந்தும் இருக்கின்றோம்.

எனது கருத்தின்படி இணைப்பாடச் செயற்பாடுகள் மாணவர்களின் அறிவு மற்றும் அனுபவப் பரப்புகளை விசாலமாக்குவதுடன், அவர்களது கல்வி கற்கும் திறனையும், கருத்தூன்றல் மற்றும் மனனஞ் செய்யும் திறனையும், வேகமாக - தெறிவினை போல் தொழிற்படும் திறனையும் அதிகரிக்கின்றன. இவற்றால் கல்விசார் வினையாற்றல்கள் அதிகரிக்கின்றன.

கற்றல் என்பது 'காட்டுக்குப் போய்த் தவம் செய்தல்' போல் அல்ல. வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்தவாறு, பாடவிதானப் பரப்புகளை அறிந்து, அடைய வேண்டிய இலக்கை அடைவதே கற்றலாக இருக்க முடியும். அத்துடன் எவ்வளவு நேரம் கற்கின்றோம் என்பதனைவிட, எவ்வளவு விளங்கி, எவ்வளவு ஆழமாகக் கற்கிறோம் என்பதிலும், அதனை எவ்வளவு அழகாகப் பரீட்சையில் அளிக்கை செய்கின்றோம் என்பதிலுமே கல்விப் பெறுபேறுகள் தங்கி நிற்கும்.

***ஆரம்பக் கல்வி***

தனியாள் சார்ந்த காரணிகளின் இறுதியில் ஆராயப்பட்டாலும், இடைநிலைக் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் மிக முக்கியமானதொரு காரணியாக அமைந்திருப்பது மாணவர்களுக்குக் கிடைத்த அடித்தளமான

ஆரம்பக் கல்விதான் எனலாம். ஆரம்பக் கல்வியானது மாணவர்களின் பகுத்தறிவை, அதாவது பகுத்து அறிவதை ஊக்குவிப்பதாக அமைவதுடன், மாணவர்கள் தம்மையும், தாம் வாழுகின்ற சூழலையும் ஆய்ந்தறிந்து கொள்ளக்கூடிய வகையாகவும் அமைதல் வேண்டும். ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்கள் கல்வியை விளையாட்டாக, சுமைகள் அற்றதொன்றாக, ஊக்கமும் உற்சாகமும் தருவதாக, ஆர்வத்தைத் தூண்டுவதாக, படைப்பாற்றலையும் புனைவுத் திறன்களையும் விருத்தி செய்வதாக, முக்கியமாக குறிப்பிட்ட சில பாடங்கள் மீது அல்லது கல்வி மீது வெறுப்பு ஏற்படுத்தாததாக அமைந்திருத்தல் வேண்டும்.

ஆயினும் எமது சூழமைவின் யதார்த்தம் வேறுவிதமாக அமைந்திருக்கின்றது. புலமைப் பரிசில் என்கின்ற நச்சுச் சுழலில் அகப்பட்டுக்கொண்ட பெற்றோரும், ஆசிரியரும், அதிகாரிகளும் மாணவர்களது முதிரா உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்து, அவர்கள் மீது சுமைகளை ஏற்றிக் கனக்க வைக்கின்ற தன்மையே தற்காலத்தில் பெரிதும் காணப்படுகிறது. புலமைப் பரிசில் பெறுபேறுகள், மாணவர்களது பிற்காலக் கல்வியில் எந்தவிதமான குறிப்பிடத்தக்க விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை என்ற பேருண்மையைத் தெரிந்தோரும், தெரியாதோரும் இவ்வாறு மாணவர்களைக் கசக்கிப் பிழிவதில் முன்னிற்பது துர்ப்பாக்கியமானதே.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், ஆரம்பக் கல்வியானது மிகவும் பக்குவமாக, துறை சார்ந்த பயிற்சிகள் உடையோரால் வழிநடத்தப்படும் பொழுது; அதன் வழி வந்த மாணவர்கள், இடைநிலைக் கல்வியில் சிறப்பாகச் செயலாற்றும் திறனைக் கொண்டிருப்பார்கள். அவ்வாறான சூழல் கிடைக்கப் பெறாதவர்கள் தமது தொடர் கல்வியிலும் சிரமங்களை எதிர்கொள்வதனையும், அச்சிரமங்கள் அவர்களின் பெறுபேறுகளையும், அடைவுகளையும் பாதித்துவிடுவதனையும் காணலாம்.

**பாடசாலை சார்ந்த காரணிகள்**

மாணவர்களது கற்றல் செயற்பாடுகளையும், கல்விசார் அடைவுகளையும் வழிப்படுத்துவதில் பாடசாலை தொடர்பான காரணிகள் மிகவும் காத்திரமான பங்கை ஆற்றுகின்றன. எனது வசதி கருதி, இந்தக் காரணிகளை ஆசிரியர் தொடர்பான காரணிகள், பாடசாலையின் பௌதிகச் சூழல் தொடர்பான காரணிகள், பாடசாலை நிர்வாகம் தொடர்பான காரணிகள் எனும் பெரும் பிரிவுகளுக்குள் அடக்கி ஆராய விழைகின்றேன்.

***ஆசிரியர்***

பாடசாலை தொடர்பான வளங்களில் மிக முக்கியமான வளமாகத் திகழ்வது ஆசிரிய வளமாகும். ஆசிரியர்களது தொழில்வாண்மைசார் தகைமைகளும், தமது தொழிலின்மீது கொண்டிருக்கும் பற்றுறுதியும், அர்ப்பணிப்பும் மாணவர்களின் கல்வி மீது செல்வாக்குச் செலுத்தும் திறனை உடையன. ஓர் ஆசிரியர் தனது கற்பித்தற் செயன்முறையை முறையாகத் தயார் செய்து, தன்னம்பிக்கையோடு அளிக்கை செய்யும் பொழுது, அது, அவர் எய்த விரும்புகின்ற அடைவிலக்கு, மாணவரை இலகுவாகச் சென்றடையும். எனவே ஒரு நல்லாசிரியர், தான் கற்பிக்கும் பாடம் மீது தெளிவான பார்வை, விரிவான அறிவு, தேர்ந்தெடுத்துக் குவியப்படுத்தும் ஆற்றல் வரப் பெற்றவராகத் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும். அவர் தான் கற்பிப்பதில் நம்பிக்கையும், விசுவாசமும், காதலும் உடையவராக இருப்பின், அவரது அந்த இயல்புகள் இலகுவாக மாணவருக்குக் கடத்தப்படும்.

ஆசிரியர்களுடைய கற்பிக்கும் திறன்களும், அவர்கள் கையாளும் நுட்பங்களும் முக்கியமானவை. ஓர் ஆசிரியர் தான் கற்பிக்கின்ற மாணவர்களது தகுதி, தராதரங்களுக்கு ஏற்ப, தனது கற்பிக்கும் நுட்பங்களைப் பிரயோகிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். தெளிவான மொழிவளம், தொடர்பாடல் திறன்கள் போன்றன மாணவரின் அவதானிப்புப் புலத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ள உதவும். அதேபோல் ஓர் ஆசிரியர் தனது வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களின் குணவியல்புகளையும், பலம் பலவீனங்களையும் அறிந்து, அதற்கேற்றாற்போல், தனது கற்பித்தலை மேற்கொள்ளக்கூடியவராகவும் இருத்தல் நல்லது. சுருக்கமாகக் கூறின், ஆசிரியர்களது கற்பித்தல் திறனானது மாணவர்களது கல்வியில் நிறைந்த செல்வாக்குச் செலுத்தும் காரணியாக இருக்கின்றது.

மாணவர்களது கல்விசார் அடைவுகளிலும், தனித்துவமான ஆளுமை விருத்தியிலும் பிரதான பங்காற்றுகின்ற முக்கியமானதொரு காரணியாக அமைந்திருப்பது ஆசிரியர் - மாணவர் உறவு நிலையாகும். ஓர் ஆசிரியர் தன்னுடைய மாணவர்களோடு கொண்டிருக்கக்கூடிய முற்கற்பிதமற்ற, தீர்ப்பிடாத, தனித்துவத்தை ஏற்றுக்கொள்கின்ற உறவுநிலையானது மிகுந்த சக்தி வாய்ந்த ஒன்றாகும். அந்த உறவு நிலையில் ஆசிரியர் சொல்வதனை மாணவர்கள் ஏற்றுக்கொண்டு அதன்வழி நடக்க முற்படும் அதேவேளை, மாணவர்களும் தமது சிக்கல்கள், இடர்ப்பாடுகள், தெளிவின்மைகள், குழப்பங்கள் பற்றி ஆசிரியரோடு தன்னம்பிக்கையுடன் தொடர்பாடுகின்ற வாய்ப்புகளும் ஏற்படும். இந்த உறவுநிலை மிகவும் தாக்க வன்மையுடையது; நட்பு ரீதியிலானது; திசை காட்டி வழிநடத்தும் குருநிலை போன்றது. நல்ல பெறுபேறு எடுக்கின்ற பல மாணவர்கள் தமது ஆசிரியர்களைப் பற்றிச் சிலாகித்துக் கூறுவதனை நாம் கேட்டிருக்கிறோம். நல்ல விதமாக அமைந்த ஆசிரிய மாணவ உறவுகள் ஆண்டாண்டு காலம் தழைத்து நிற்பதனையும் நாம் காண்கிறோம். எனவே தரமான ஆசிரிய மாணவ உறவு நிலையானது, கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணமாகின்றது.

பல வேளைகளில் ஆசிரியர்கள் தமது மாணவர்கள்மீது ஓர் அதிகாரத்துவம் நிறைந்த அணுகுமுறையை நிலைநிறுத்துவதில் முனைப்புடன் செயற்படுவதனை நாம் காண்கின்றோம். இதற்காக அவர்கள் மாணவர்களின் தனித்துவமான இயல்புகளை மதிக்காமை, தன்னம்பிக்கையைச் சிதைக்கக் கூடிய மோசமான வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்தல், உள உடல் தண்டனைகளை வழங்குதல் போன்ற, ஓர் அதிகாரத்தை நிலைநிறுத்தப் பயன்படுகின்ற எல்லாவிதமான பொறிமுறைகளையும் கையாளுவார்கள். இது மாணவர்களிடையே ஆசிரியர் சம்பந்தமாகவும், கல்வி சம்பந்தமாகவும், ஓர் எதிர்ப்புணர்வையும், பகைமையுணர்வையும் தோற்றுவிப்பதனால் அவர்கள் தம்மால் அடையக்கூடிய அடைவுகளைக்கூட அடைய முடியாது போகின்ற சூழல் ஏற்பட்டுவிடுகின்றது.

ஒரு நல்ல ஆசிரியர் தமது மாணவர் ஒவ்வொருவரும் அடையக்கூடிய இலக்கை அவர்கள் புரிந்துகொள்ள, தீர்மானித்துக்கொள்ள வழிகாட்டுவதுடன், அவர்கள் அந்த அடைவிலக்கினை நோக்கி நகர்வதனையும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

***பௌதிக சூழல்***

கல்வி கற்கின்ற இடம், அதனுடைய பௌதிகரீதியான சூழல் கற்றலை இலகுபடுத்துவதாக அமைந்திருக்க வேண்டியது அவசியம். இடவசதி, தளபாட வசதி, போதியளவு வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் போன்றவையும்; தேவையான கற்றல் உபகரணங்கள், செயன்முறைக்கான வசதிகள் போன்றவையும் அத்தியாவசியமானது. அதுபோல் கவனக் கலைப்பான்கள், ஒலி மாசு போன்ற விடயங்களும் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். குறிப்பாகச் சுத்தமான குடிநீர், சுகாதாரமான மலசலகூடம் என்பவை இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இங்கே குறிப்பிட்டவை இலட்சியமயப்படுத்தப்பட்ட தேவைகள் அல்ல. இவை அடிப்படையான தேவைகள் - இந்த அடிப்படையான தேவைகள் நிறைவேற்றப்படாதவிடத்து, மாணவர்களது உயர் தேவைகளும், அடைவுகளும், பெறுபேறுகளும் பாதிப்பிற்குள்ளாவது தவிர்க்க முடியாதது. வீதி விளக்குகளில் படித்து ஜனாதிபதியான, மரநிழலில் படித்து மாமனிதர்களான கதைகள் எல்லாம் புறநடைகளே. புறநடைகள் விதிகளாக ஆகிவிடாது.

எனவே மாணவர்கள் தமது கல்வியில் நல்ல வினையாற்றல்களை அடைவதற்கு அதற்கு உகந்த, தகுந்த பௌதிகச் சூழல் அமைவது அவசியம். அது படிக்கும் நேரத்தில் மட்டுமல்லாது, பரீட்சை நேரங்களிலும் அமையப் பெற்றிருப்பது முக்கியமானது. பாடசாலைக்குப் புறம்பான கல்வி நிறுவனங்களில் இந்த வசதிகள் அரிதாகவே கிடைக்கின்றன. அந்த நிறுவனங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களும், அந்த நிறுவனங்களும் தாம் அடைய விரும்புகின்ற கல்விசார் இலக்கை அடைய முடியாமல் போகின்றமைக்கு அந்நிறுவனங்களின் மிக மோசமான பௌதிகச் சூழலும் ஒரு காரணியாகின்றது.

***கல்வி நிர்வாகம்***

பாடசாலைகளையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் நிர்வகித்து, கல்வியின் பொதுமையான, பரந்த இலக்கை அடைவதனை உறுதிப்படுத்தும் நிர்வாகிகளாக அதிபரும், ஏனைய நிர்வாக உத்தியோகத்தர்களும் அமைந்திருக்கின்றார்கள். இந்த நிர்வாகிகள் இந்த உரையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட

பாடசாலை, ஆசிரியர், மாணவர் எனும் மூன்று தரப்புகளையும் புரிந்துகொண்டு, அவை ஒவ்வொன்றும் ஒன்றுடனொன்று ஒத்திசைவாகச் செல்வதற்கு துணைபுரிய வேண்டும். இந்த நிர்வாகிகள், அடிப்படையில் மாணவர்கள் தாம் அடையக்கூடிய இலக்குகளை அடைவதற்குத் துணைபுரியும் உதவியாளர்களே அன்றி, மாணவர்களையும், ஆசிரியர்களையும் அடக்கி ஆளுகின்ற, அடிமை கொள்கின்ற எஜமானர்கள் அல்ல.

சிலசமயங்களில் நிர்வாகப் பொறுப்புகளிலிருக்கும் மனிதர்கள் தமது வகிபாகத்தில் அடையாளக் குழப்பம் ஏற்பட்டுத் தம்மையும் வருத்தி, தம்மைச்சூழவுள்ள ஆசிரியர், மாணவர் போன்றோரையும் வருத்திக் கொண்டிருப்பதனைக் காணலாம். மற்றவர்களைப் பழி கூறும், தண்டனை வழங்கும், அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் நிர்வாகிகள் இருக்கின்ற கல்விச் சூழலில் அன்பு இருக்காது; அமைதி இருக்காது; நம்பிக்கையிருக்காது; இன்னும் நல்லனவெல்லாம் இருக்காது.

மேலும் கல்வி நிர்வாகம்சார் உத்தியோகத்தர்கள், மாணவர்கள் கல்வியின் முழுப்பயனைப் பெற்று நற்பிரஜைகளாக, பூரணமான மனிதர்களாக உருவாகுவதனை உறுதி செய்தல் வேண்டும். அதற்கு மாறாக, குறுகிய, மலிவான பிரபல்யங்களைத் தருகின்ற, பரீட்சைசார் பெறுபேறுகளை மட்டும் மையப்படுத்தித் தமது கல்வி நிறுவனங்களை இயக்கக்கூடாது. உதாரணமாக மாணவர்களைத் திட்டித் தீர்த்தல், பரீட்சை எழுதவிடாது தடுத்தல், பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களை மட்டும் கொண்டாடுதல், ஆசிரியர்களைப் பலவீனமானவர்களாக உணரச் செய்தல், ஆசிரியர்களின் செயற்றிறனைக் குறைத்து மதிப்பிடுதல், எப்போதும் வெற்றியை மட்டுமே மனங்கொள்ளல் போன்ற தரங்குறைந்த நிர்வாக அணுகுமுறைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் மாணவர்களது கல்வியிலும், அவர்களது வினையாற்றல்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

பாடசாலை சார்ந்த மேற்குறிப்பிட்ட மூன்று காரணிகளுக்கும் மேலாக எப்போதும் மாறும் இயல்புடைய பாடவிதானங்களும், அடிக்கடி மாற்றத்துக்குள்ளாகும் கல்விக் கொள்கைகளும், கல்வி அடைவைக் கணிப்பீடு செய்யும் முறைமைகளும், ஆசிரியர்களைத் தயார்ப்படுத்தும் நிறுவனங்களின் வகிபங்கும் மாணவர் கல்வி மீதும், அவர்களின் கல்விசார் அடைவுகள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தவல்லன. அவை பற்றி இங்கு விரிவாக ஆராயப்படவில்லை.

**பெற்றோர் சார்ந்த காரணிகள்**

மாணவர்களின் கல்வியிலும் அவர்களது வினையாற்றல்களிலும் பங்கு வகிக்கின்ற இன்னுமோர் முக்கியமான காரணிகளின் தொகுதி, அவர்களது பெற்றோர் சார்ந்ததாக இருக்கின்றது. துரதிஷ்டவசமாக ஒரு நல்ல பெற்றோராக இருப்பது எப்படி? என்று நாங்கள் ஒருவருமே கற்பதில்லை. நாங்கள் ஒவ்வொருவருமே பெற்றோராக வருகின்ற பொழுது எமது பழைய அனுபவங்களை மனதிருத்தி, அவற்றை ஏற்றுக்கொண்டு அல்லது அவற்றின் மீது எதிர்ப்புணர்வு கொண்டு, முயன்று தவறுதல் முறை மூலமே பிள்ளை வளர்ப்பை முயற்சி செய்கின்றோம். எனவே பல சமயங்களில் பெற்றோராகிய நாம் தவறுகள் இழைத்துவிடவும் வாய்ப்புகள் இருக்கின்றன.

மாணவர்களின் கல்விசார் வினையாற்றல்களில் நேரிடையான செல்வாக்குச் செலுத்தும் காரணியாகப் பெற்றோரின் கல்வியறிவு காணப்படுகிறது. கல்வியறிவுமட்டம் கூடிய பெற்றோரின் பிள்ளைகள், கல்வியறிவு குறைந்த பெற்றோரின் பிள்ளைகளைவிடக் குறிப்பிடத்தக்களவு கூடிய வினையாற்றல்களைக் காட்டுவது அவதானிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பொதுவான அவதானிப்புக்கு விதிவிலக்குகள் இருக்கின்றன என்பதனை மறுப்பதற்கில்லை.

இதற்கு அடுத்தபடியாக பெற்றோருடைய மனப்பாங்கு வருகின்றது. சிறந்த அடைவு இலக்கை மையமாகக் கொண்ட பெற்றோர் தமது பிள்ளைகளிலும் நல்ல அடைவுகள் ஏற்படுவதனை உறுதி செய்து கொள்கின்றார்கள். அதுபோல் தமது பிள்ளைகளின் விருப்பு, வெறுப்புகளுக்கு மதிப்பளித்து, அவர்களின் பலம், பலவீனங்களைப் புரிந்துகொள்ளக்கூடிய பெற்றோரும், தமது பிள்ளைகளைத் திறன்பட, அவரவரது திறனுக்கேற்பச் செயலாற்றும் வழிகாட்டல்களை வழங்கி அவர்களது வினையாற்றல்களைக் காத்திரமானவையாக மாற்றிவிடுகின்றார்கள்.

அதிகம் ஆசைப்படும் பெற்றோரும், தமது பிள்ளைகளின் தனித்துவத்திற்கு மதிப்பளிக்காது தமது விருப்பங்களைத் திணிக்கின்ற பெற்றோரும், அவாப் பிடித்து மற்றும் பொறாமை பிடித்து அலையும் பெற்றோரும் தமது பிள்ளைகளின் கல்வியில் எதிரிடையான செல்வாக்கையே செலுத்துகின்றனர். எல்லாப் பிள்ளைகளும் முதலாம் பிள்ளையாக வரமுடியாது என்பதனையோ, எல்லாப் பிள்ளைகளும் வைத்தியராகவும், பொறியியலாளராகவும், கணக்காளராகவும் வரமுடியா தென்பதனையோ இவ்வகைப்பட்ட பெற்றோர் புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருப்பர். இவ்வாறான புரிதல்கள் ஏற்படாதபடியால் இவர்கள் தமது பிள்ளைகளின் திறன்களுக்கும், கொள்ளளவுக்கும் அதிகமானவற்றைத் தம் பிள்ளைகளின்மீது திணிக்கவும், எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்காதபோது தம் பிள்ளைகளைத் தண்டிக்கவும் தலைப்படுவார்கள். இவை எவையும் ஆக்கபூர்வமான விளைவுகளைத் தரமாட்டாது.

பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்விக்கு வழிகாட்டியாக இருப்பதுடன் மட்டும் நின்றுகொண்டு, அவர்களது படிப்பினை அவர்களிடமே விட்டுவிடுவது சிறந்தது. அளவுக்கதிகமான தலையீடும், அக்கறையீனமான போக்கும் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த உதவப் போவதில்லை என்பதனை நாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். எல்லா வேளைகளிலும் பிள்ளைகளின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தி, அவர்களின் சுயகணிப்பீட்டைச் சரியான அளவில் வைத்திருப்பதனைப் பெற்றோர் உறுதிப்படுத்த வேண்டும். பெற்றோர் தாம் அடைய விரும்பி அடைய முடியாமல் போன இலக்குகளைத் தமது பிள்ளைகள் மீது வலிந்து திணிப்பதனைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

பிள்ளைகளின் கல்வியில் செல்வாக்குச் செலுத்துகின்ற இன்னுமோர் காரணியாகப் பெற்றோர்களிடமிருந்து கிடைக்கின்ற உறுதியான, நிலையான தகவல்களைக் குறிப்பிடலாம். பெற்றோர் ஒவ்வொருவரிடமிருந்தும் கிடைக்கின்ற கல்வி தொடர்பான முரண்பாடான தகவல்கள், சுயலாபம் கருதிய செயன்முனைப்புகள் போன்றன பிள்ளையின், மாணவரின் கல்வியடைவுகளில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியன. இது பற்றியும் பெற்றோர் கவனத்திலெடுக்க வேண்டும்.

குறிப்பாக ஒரு பிள்ளை எதிர்பார்த்த அடைவை எய்தத் தவறுகின்ற பொழுது அதனை ஏற்றுக்கொண்டு, அந்தப் பிள்ளையின் மனவுணர்வுகளைப் புரிந்துகொண்டு, பிள்ளையோடு ஆதரவாக இருந்து, காரண காரியங்களை விளங்கிக்கொண்டு, அப்பிள்ளை தனது கல்விப் பயணத்தில் தொடர்ந்து செல்லப் பெற்றோர் உதவ வேண்டும். வாயும், வயிறும், உயிரும், உணர்வும் வேறு வேறு என்று சொன்னாலும், பிள்ளைகள் பெற்றோரின் உயிரியல் நீட்சிகளே என்பதனை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

**சூழல் சார்ந்த காரணிகள்**

இந்த உரையில் மாணவர்களின் கல்விசார் வினையாற்றல்களில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய காரணிகள் என இதுவரையில் குறிப்பிட்டவற்றிற்குச் சற்றும் முக்கியத்துவம் குறையாத இன்னுமோர் காரணியாக மாணவர்கள் கற்கின்ற சூழல் தொடர்பான காரணிகள் இருக்கின்றன. இவ்வாறான சூழல் காரணிகளில் பொதுவான சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

***வீட்டுச் சூழல்***

மாணவருடைய வீட்டுச் சூழல் என்பது மிக மிக முக்கியமான ஒரு சூழல் காரணியாகும். வீட்டின் பௌதிகச் சூழலும், உணர்ச்சிச் சூழலும் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு உதவியாக இருக்கும் பொழுது, அவை மாணவரின் செயலாற்றல் திறன்களையும் அதிகரிக்க உதவி செய்யும். யதார்த்தத்தில் எமது சூழலில் உள்ள பல வீடுகளின் பௌதிக அமைப்பு படிப்பதற்கு ஏற்றவிதமாக இருப்பதில்லை. எங்கள் வீடுகளில் அமைதியான சூழல் அமைவது மிகவும் அரிதாகவே இருக்கும். வானொலியும், தொலைக்காட்சியும், அண்டை அயலில் உள்ள கோவில் ஒலிபெருக்கியும் எப்போதும் இடைஞ்சலாகவே இருக்கும். பல வீடுகளில் வீட்டு வன்முறைகளும், வாய்த்தர்க்கங்களும், மது துர்ப்பாவனையும் மலிந்து காணப்படுகின்றன.

இவ்வாறான சூழலில் வாழுகின்ற மாணவர்கள் ஒழுங்கான முறையில் போதியளவு நேரம் படிப்பதற்கோ, நிம்மதியாகத் தேவையானளவு நேரம் தூங்கி எழுவதற்கோ, சுயகௌரவத்தோடு நடமாடவோ முடியாமல்

போகின்ற நிலையே நிலவுகின்றது. அது அவர்களது கல்விசார் வினையாற்றல்களையும் பாதிக்கின்றது. கல்வி கற்கின்ற பிள்ளைகள் இருக்கின்ற வீட்டுச் சூழலானது கருத்தூன்றிக் கற்றலுக்கு உதவுவதாக, அவர்களை எந்தவிதத்திலும் குழப்பாத ஒன்றாக இருப்பது அவசியமானது.

***சமூகச் சூழல்***

வீட்டிற்குப் புறம்பாக சமூகத்தில் காணப்படும் அல்லது சமூகத்தால் உருவாக்கப்படும் காரணிகளும் கல்வியில் செல்வாக்கைச் செலுத்துகின்றமை அறியப்பட்டிருக்கின்றது. மாணவர்கள் இருக்கின்ற சமூகம் உறுதியற்றதாக, வன்முறைகள் மலிந்ததாக, மனித விழுமியங்கள் உரிமைகளுக்கு மதிப்பளிக்காததாக மாறுகின்ற பொழுது, அந்தச் சூழல் அந்த மாணவர்களின் பார்வைகள் மற்றும் மனப்பாங்குகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, கல்வியின் அடைவுகளிலும், வினையாற்றல்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

யுத்தம், வறுமை, இடப்பெயர்வு, இராணுவ மயப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள் நிச்சயமாகக் கல்விப் பெறுபேறுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதுபோல் அடிப்படை வசதிகள் கிடைக்காமை, ஆதரவு இல்லாத நிலைமை போன்றவையும் கல்வியைப் பாதிக்கக்கூடியன. சில வேளைகளில் மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல நெருக்கீட்டு நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் பொழுது, அது அவர்களின் எதிர்கொள்ளும் திறனைப் பாதித்து, வினையாற்றல்களைக் குறைத்துவிடுகின்றன. இவை பற்றி நான் அதிகம் விபரிக்கத் தேவையில்லை என எண்ணுகின்றேன்.

***கவனக் கலைப்பான்கள்***

ஒவ்வோர் காலப்பகுதியிலும் மாணவர்களைச் சூழப் பல்வேறு விதமான கவனக் கலைப்பான்கள் காணப்படும். தற்போதைய காலப்பகுதியை எடுத்துக்கொண்டால் இவ்வாறான கவனக் கலைப்பான்களாகச் சினிமா, கணினி விளையாட்டுகள், கையடக்கத் தொலைபேசிகள், இணையத்தளப் பாவனை போன்றன காணப்படுகின்றன. இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன்பு வானொலி, தொலைக்காட்சி, சினிமா, சித்திரக் கதைப் புத்தகங்கள், நாவல்கள், அரசியல் சார்ந்த கோஷங்கள் மற்றும் இயக்கச் செயற்பாடுகள் போன்றன கவனக் கலைப்பான்களாக இருந்தன. இவை போன்று வெவ்வேறு காலப்பகுதியில் இருக்கின்ற பல்வேறு அம்சங்கள் தம்மீது இளம் பராயத்தினருக்கு ஈர்ப்பை ஏற்படுத்தும் வல்லமையைக் கொண்டிருக்கின்றன. இவற்றால் அளவுக்கு அதிகம் ஈர்க்கப்படும் மாணவர்கள் இலக்குத் தவறி, திசை மாறி, தாம் அடைய விரும்புகின்ற கல்விசார் இலக்குகளை, பெறுபேறுகளை அடைய முடியாமல் போகின்றனர்.

இதைப்போன்று, இடைநிலைப் பாடசாலை மாணவர்களின் கவனத்தைத் திசை திருப்பும் இன்னுமோர் காரணியாக மது, புகையிலை, கஞ்சா, லேகியம், பீடா போன்ற போதை தரும் பதார்த்தங்களுக்கு அறிமுகமாதல் அமைந்துள்ளது. கட்டிளமைப் பருவத்தினர் இவ்வாறான பல்வேறு இடர்தகவு வாழ்க்கை அனுபவங்களைப் பரீட்சித்துப் பார்க்கும் ஆவல் உடையவர்களாக இருந்தாலும், அது அத்துடன் நின்று விடுவதில்லை. போதை தரும் பதார்த்தங்களின் அறிமுகம் நாளடைவில் அவற்றிற்குப் பழக்கப்பட்டுப் போய்விடும் நிலைமையை ஏற்படுத்திவிடுகின்றன. இவை மாணவரின் வினையாற்றல்களில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எமது பண்பாட்டைப் பொறுத்தவரையில், இவ்வாறான 'போதை தருகின்ற பதார்த்தங்களைத் தொடுவ தில்லை' என்ற நிலைப்பாட்டை மாணவர்கள் உறுதியாக எடுப்பதுவே சாலச் சிறந்தது என்று நான் கருதுகிறேன்.

இடைநிலைக் கல்வி பயிலும் கட்டிளமைப் பருவத்தினர் எதிர்கொள்ளுகின்ற இன்னுமொரு பெரிய சவால் பாலியல்சார் விடயங்களாகும். துணைப் பாலியல்புகளின் விருத்தி, பாலியல் தொடர்பான உடல் உளச் செயற்பாடுகள் மற்றும் காதல் என்கின்ற மென்னயமான உணர்வு போன்றன இப்பராயத்தினர் எதிர்கொள்ளும் முக்கிய விடயங்களாக அமைந்திருக்கின்றன. பல மாணவர்கள் இவற்றை ஏதோவொரு வழியில் வெற்றிகரமாக எதிர்கொண்டு தங்களது பாதையைத் தொடருகின்றபோதும், கணிசமானளவு மாணவர்கள் இவை மூலம் வருகின்ற சவால்களுக்கும், குழப்ப நிலைகளுக்கும் ஆளாகி, தமது கல்வி தொடர்பான கவனஞ் சிதைந்து, வாழ்க்கையின் திசை மாறிப் போகின்றனர்.

துரதிஷ்டவசமாக இடைநிலை மாணவர்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற பாலியல்சார் உடல் உள மாற்றங்கள் பற்றி அறிந்துகொள்ளும், சரியான தகவல்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புகளும், வசதிகளும் குறைவானதொரு நிலையிலேயே இருக்கின்றனர். பெற்றோர், ஆசிரியர் போன்றோர் பொதுவாக இவை பற்றிய போதிய விளக்கங்களை அளிக்காத வேளையில், பிள்ளைகள் அவை பற்றிய விடயங்களைக் கட்டுக்கதைகள் மூலமும், ஆபாசப் புனைவு எழுத்துக்கள் மற்றும் படங்கள் மூலமும், தரமற்ற சினிமாக்கள் மற்றும் கதைகள் மூலமும் தவறாகப் பெற்றுக் கொள்கிறார்கள்; அதனால் இடர்ப்படுகிறார்கள்.

இந்தப் பருவத்து மாணவர்களில் சிலர் எதிர்ப்பாலரில் ஏற்படும் ஈர்ப்பு, மற்றும் கவர்ச்சிக்கு மிக வேகமாகக் காதல் என்ற அடையாளத்தைக் கொடுத்து; பின்பு காதல் தொடர்பாக இருக்கின்ற புனிதம், தியாகம், சரணாகதி அடைதல் போன்ற இலக்கியத்தனமான கருத்தேற்றங்களுக்கு முக்கியத்துவம் அளித்து; கைகளிலும் மார்பிலும் பச்சை குத்தி; பாடம் மறந்து; படிப்பை வெறுத்து; வீட்டைத் துறந்து; நன்மதிப்புக் கெடும் நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். இதனை ஓர் உள முதிர்ச்சியற்ற செயலாகவே பார்க்கத் தோன்றுகின்றது. சில வேளைகளில் அவசரமான, பாதுகாப்பற்ற பாலுறவுகளுக்கும் இது வழிகோலுகிறது.

ஓர் உளமருத்துவராக நான் கூற விரும்புவது என்னவென்றால், இந்த வயதில் ஏற்படுகின்ற ஈர்ப்புகள், விருப்பங்கள், கனவுகள் போன்றன இயல்பானவை; மிகவும் சாதாரணமானவை; மாறுநிலையை உடையவை; தற்காலிகமானவை. அவற்றிற்கு அவசரப்பட்டு காதல் என்கின்ற முத்திரை குத்தி, பின்பு காதலித்தல் என்கின்ற புதியதோர் செயற்பாட்டுக்குள் ஈடுபடாது இருத்தலே சிறந்தது. இவ்வாறான உணர்வுக் குழப்பங்களால் அதிகளவு குழப்பமடையும் மாணவர்கள் சுயமாகத் தீர்மானமெடுக்காது, தாம் விரும்புகின்ற, நம்புகின்ற, உளமுதிர்வுடைய ஓர் ஆசிரியரையோ, பெற்றோரையோ கலந்தாலோசித்தல் அவசியமானது.

இங்கே நான் குறிப்பிட்ட பல விடயங்கள் கவனக் கலைப்பான்களாகத் தொழிற்பட்டு, மாணவர்களின் கல்விப் பயணத்தில் தடங்கல்களையும், எதிர்விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன.

இவற்றைவிடவும் பல்வேறு விதமான சூழற் காரணிகள் மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். எனினும் நேரச் சிக்கனம் கருதி அவற்றைத் தவிர்த்துவிடுகிறேன்.

**முடிவுரை**

நான் இங்கு இதுவரை குறிப்பிட்டதிலிருந்து மாணவர்களின் கல்விசார் வினையாற்றல்கள் - குறிப்பாக அவர்கள் போட்டிப் பரீட்சைகளில் எடுக்கின்ற பெறுபேறுகள் பன்முகத் தன்மையுடைய, ஒன்றுடன் ஒன்று நெருங்கிப் பிணைந்த பல்வேறுபட்ட காரணிகளினது கூட்டு விளைவாகவே அமைந்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது. மாணவர்களின் வெற்றியோ அல்லது வெற்றி எனக் கருதப்படாத நிலைகளோ இவ்வாறான பல காரணிகளின் செல்வாக்கால் தீர்மானிக்கப்படக்கூடியவை என்பதனை நாங்கள் விளங்கிக்கொள்வது நல்லது. இவ்வாறு இதனை விளங்கிக் கொள்வோமானால், நாங்கள் மாணவரையோ அன்றி ஆசிரியரையோ மட்டும் பழிகூறும் பாரம்பரியத்தை மாற்றிக்கொள்ளலாம். அதுபோல் தனியே பாடசாலைகளை மட்டும் போற்றுவதோ அன்றித் தூற்றுவதோ பயன்தராது.

மாணவர்களுக்கு கல்வி புகட்டும்போது அல்லது அவர்களிடம் நல்ல பெறுபேறுகளை எதிர்பார்க்கும்போது நாங்கள் அவற்றின்மீது செல்வாக்குச் செலுத்தும் எல்லாக் காரணிகள் பற்றியும் தெரிந்து வைப்பதோடு, அவை சாதகமாக இல்லாதவிடத்து, அவற்றிற்கான மாற்று ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும். மாணவர்களின் வினையாற்றல்களை நேரிடையாகப் பாதிக்கும் காரணிகளை எவ்வாறு அதிகரிக்கலாம்? எதிரிடையாகப் பாதிக்கும் காரணிகளை எவ்வாறு கையாளலாம்? அல்லது அவற்றை எவ்வாறு சாதகமானதாக மாற்றலாம்? என்பது இன்னுமொரு பேருரையாக அமையக்கூடிய விரிந்த பரப்பு; ஆகையினால் அவற்றை இங்கு விட்டுவிடுகின்றேன்.

***உரைக்குப் பின்னால்.***

இந்த உரையை இத்துடன் முடித்துக்கொள்ள மனம் விரும்பவில்லை. கல்வி என்னும் விரிவான புலத்தில் கல்விசார் வினையாற்றல்களை மட்டும் அதனது அடைவாக அல்லது விளைபொருளாகக் கொள்வது சரிதானா? என்று மனம் வினவுகிறது. பரீட்சைப் பெறுபேறுகளை மட்டுமே மையப்படுத்தி பாடசாலைக்குப் புறம்பான

கல்வி நிலையங்கள் இயங்கும் பொழுது; கல்விப்புலம் சார்ந்தோரும், பெற்றோரும், மாணவரும் அவ்வாறான குறுக்கு வழிகளையே சரியென்று கருதிக்கொள்ளும் சூழமைவில்; பாடசாலைகள் ஏன் கல்விசார் அடைவுகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்? என்பதுவும் புரியவில்லை. பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் எடுப்பதற்குப் பாடசாலைகள் உதவுவதில்லை எனும் கருத்து மேலோங்கிக் காணப்படும் ஒரு செல்நெறியில், பாடசாலைகள் கல்வியின் ஏனைய இலக்குகளான ஆளுமை விருத்தி, விளையாட்டு, கலைகளில் ஈடுபடல், குழுக்களாக இயங்குதல், பிரச்சினைகள் தீர்க்கும் ஆற்றலை வளர்த்தல், கோபத்தைக் கையாளும் தகைமையை உருவாக்குதல், ஆரோக்கியமான போட்டி நிலைமைகளை உருவாக்குதல், தனிநபர் பிரச்சினைகளைக் கையாளுதல், வாழ்க்கைக்குத் தேவையான திறன்களைச் செயன்முறையோடு கற்றல் போன்ற பல்வேறு விதமான விடயங்களை முதன்மைப்படுத்தினால் என்ன? பாடசாலை என்ற நிறுவனம் மாணவர்களின் விருப்பத்திற்குரியதாக, ஒழுக்க விழுமியங்களைப் புகட்டி நல்ல குடிமக்களை உருவாக்கும் நிறுவனமாக வளர்ச்சி பெற்றால் என்ன? என்பது போன்ற கேள்விகள் தவிர்க்கவொணாதபடி என்னுள் எழுகின்றன.

**நிறைவு**

இந்த உரையை நான் இரசித்த ஒரு கவிதையோடு நிறைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தக் கவிதையை ஏழு வயதான ஒரு சிறுமி எழுதியிருந்தாள். அவள் என்ன நினைத்து இதனை எழுதினாளோ நான் அறியேன். அதனைக் கேட்பதுவும் நாகரீகம் இல்லை. ஆயினும் இந்தக் கவிதை எனக்குச் சில செய்திகளைச் சொல்லிற்று.

பூக்கள் அழகானவை
பூக்கள் பூத்துக் குலுங்கும்

பூக்கள் மணம் வீசும்
பூக்களில் தேன் உண்டு

பூக்கள் காலையில் மலரும்
பூக்கள் மாலையிலும் மலரும்

பூக்களில் இருந்து காய்கள் வரும்
காய்கள் பின்பு கனியாக மாறும்

பூக்களில் பல நிறங்கள் உண்டு
பூக்களில் பலவகைகள் உண்டு

பூக்கள் அழகானவை
பூக்கள் பூத்துக் குலுங்கும்.